ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - புதுக்கோட்டை மாவட்டம்
இரவுக் காவலர் காலிப்பணியிட அறிவிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் (அரசுத் தலைப்பு) இரவுக் காவலர் பணிநிலையில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

<table>
<tr><td>1</td><td>பதவியின் பெயர்</td><td>:</td><td>இரவுக் காவலர்</td></tr>
<tr><td>2</td><td>மொத்த காலிப்பணியிடங்கள்</td><td>:</td><td>3</td></tr>
<tr><td>3</td><td>ஊதியம்</td><td>:</td><td>ரூ.15700-58100 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்த இதர படிகளுடன்</td></tr>
<tr><td>4</td><td>இனச் சுழற்சி எண் மற்றும் இட ஒதுக்கீடு விவரங்கள்</td><td>:</td><td>
<table>
<tr><th>இன சுழற்சி எண்</th><th>இன சுழற்சி விவரம்</th><th>முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமையற்றவர்</th></tr>
<tr><td>2</td><td>ஆதிதிராவிடர் (அருந்ததியர்)</td><td>முன்னுரிமை பெற்றவர் பெண் - ஆதரவற்ற விதவை</td></tr>
<tr><td>3</td><td>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்</td><td>முன்னுரிமை பெற்றவர்</td></tr>
<tr><td>4</td><td>பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்கள்தவிர)</td><td>முன்னுரிமை பெற்றவர்</td></tr>
</table>
</td></tr>
<tr><td>5</td><td>வயது வரம்பு</td><td>:</td><td>
<table>
<tr><th>பிரிவு</th><th>குறைந்தபட்ச வயது வரம்பு</th><th>நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு</th></tr>
<tr><td>பிற்படுத்தப்பட்டோர்</td><td>18</td><td>34</td></tr>
<tr><td>மிகவும் பிற்படுத்தப்பட்டோர்</td><td>18</td><td>34</td></tr>
<tr><td>ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர்</td><td>18</td><td>37</td></tr>
<tr><td>ஆதரவற்ற விதவை</td><td>18</td><td>37</td></tr>
<tr><td>மாற்றுத் திறனாளி</td><td>18</td><td>ஒவ்வொரு பிரிவினருக்கும் நிர்ணயிக்கப்பட்ட உச்சபட்ச வயது வரம்பில் கூடுதலாக 10 ஆண்டுகள்</td></tr>
<tr><td>முன்னாள் ராணுவத்தினர்</td><td>18</td><td>GT- 50 years & BC/MBC/SC/ST-55 years</td></tr>
</table>
01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். மேற்கண்ட தேதியில் அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது.
</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 6 | கல்வித் தகுதி | : | தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 7 | விண்ணப்ப படிவம் | : | மாதிரி விண்ணப்ப படிவம் https://pudukkottai.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8 | விண்ணப்ப காலம் | : | 31.01.2024 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிவரை |
| 9 | விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 31.01.2024 மாலை 5.45 வரை |
| 10 | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | : | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி பிரிவு), மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை - 622 005 |

## நிபந்தனைகள்

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://pudukkottai.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து மாதிரி விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அனைத்து காலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி சான்று, மாற்றுச் சான்றிதழ், சாதிச்சான்று, தமிழ்வழிச் சான்று, கொரோனா தொற்று மற்றும் இதர காரணங்களினால் பெற்றோரை இழந்தவர்களுக்கு (இருவரையும்) வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பம் இட்ட நகல்களை இணைத்து மேலே குறிப்பிட்ட விண்ணப்ப காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
2. தேவையான இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் உறை-1 (10 x 4 inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. அரசு விதிகளின்படி மேலே குறிப்பிட்ட இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

ஒம்/-ஐ.சா.மெர்சி ரம்யா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.

/உத்தரவின்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.